


கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், ஸ்பர்ஷ் தொழுநோய் விழிப்புணர்வு கையேட்டினை
மாவட்ட ஆட்சியர் அலுவலக சிறு கூட்டரங்கில் (25.01.2017) அன்று வெளியிட, இணை இயக்குநர் (ஊரக நலப்பணிகள்)
மரு. வசந்தி அவர்கள் பெற்றுக் கொண்டார். துணை இயக்குநர் மரு. கிரிஜா (தொழுநோய்) உடனுள்ளார்.

செ.வெ.எண்: 72/2017 நாள்: 26.01.2017

**கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், தேசிய தொழுநோய் ஒழிப்புத்திட்டத்தின் சார்பாக, மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டம் (25.01.2017) அன்று நடைபெற்றது.**

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், தேசிய தொழுநோய் ஒழிப்புத்திட்டத்தின் சார்பாக, மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டம் மாவட்ட ஆட்சியர் அலுவலக சிறு கூட்டரங்கில் (25.01.2017) அன்று நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது:-

நமது மாவட்டத்தில் தொழுநோய் ஒழிப்பு தினவிழா 30.01.2017 அன்று துவங்கி 13.02.2017 வரை இரு வார விழாவாக, மாவட்டத்தில் உள்ள ஒன்பது வட்டாரங்களிலும் நடைபெற இருக்கிறது. இதில், தொழுநோய் ஒழிப்பு பேரணி, தோல் நோய் முகாம், ஊனத்தடுப்பு முகாம், விழிப்புணர்வு பிரச்சாரம் போன்ற பல்வேறு நிகழ்வுகளின் மூலம், பொதுமக்களிடையே தொழுநோய் குறித்து விழிப்புணர்வு பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளது என தெரிவித்து, பின்னர், பாரம்பரியமாக மருத்துவம் செய்யும் மருத்துவர்களுக்கு பயிற்சி அளிக்கவும், ஊனமுற்ற நோயாளிகளுக்கு மறு அறுவை சிகிச்சை செய்ய ஊக்குவிக்க வேண்டும் எனவும் (RCS – Re-Constructive Surgery), தனியாக பயிற்சி செய்யும் மருத்துவர்கள் நோயாளிகளை பரிந்துரை செய்ய ஊக்குவிக்க வேண்டும் என தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் துணை இயக்குநர் மரு. கிரிஜா (தொழுநோய்) அவர்கள் தெரிவித்ததாவது:-

எதிர்வரும் 30.01.2017 அன்று அனைத்து கிராம பஞ்சாயத்துகளிலும், கிராம சபையினை கூட்டி அந்த கிராமத்தில் உள்ள ஒரு நோயாளியினை கௌரவப்படுத்தி உறுதி மொழி எடுக்க வேண்டும் என தெரிவித்து, பின்னர் நமது மாவட்டத்தில் தொழுநோய் ஒழிப்பு பணி சிறப்பாக நடைபெறுவதாகவும், வட்டார மருத்துவ அலுவலர்கள் மிகவும் சிறப்பாக ஒத்துழைப்பு நல்குவதாகவும், கன்னியாகுமரி மாவட்டத்தில் டிசம்பர் 16-ம் தேதி வரை 86 நோயாளிகள் சிகிச்சை பெற்று வருவதாகவும் தெரிவித்தார்கள்.

முன்னதாக, ஸ்பர்ஷ் தொழுநோய் விழிப்புணர்வு இயக்கத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டது. அதனை தொடர்ந்து ஸ்பர்ஷ் விழிப்புணர்வு கையேட்டினை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வெளியிட இணை இயக்குநர் ஊரக நலப்பணிகள் மரு. வசந்தி அவர்கள் பெற்றுக் கொண்டார். பின்னர், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தலைமையில், தொழுநோய் ஒழிப்பு உறுதி மொழியினை கூட்டத்தில் கலந்து கொண்ட மருத்துவர்கள் ஏற்றுக்கொண்டனர். பின்னர், ஒரு நோயாளியை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள், கௌரவித்தார்கள்.

கூட்டத்தில் துணை இயக்குநர் (சுகாதாரப் பணிகள்) மரு.மதுசூதனன், துணை இயக்குநா மரு.கிரிஜா (தொழுநோய்), துணை இயக்குநர் (காசநோய்) மரு. துரை, முட்டம் வட்டார மருத்துவ அலுவலர்கள் மரு.பிரதீப்குமார், மரு.ரமா மாலினி, மரு. சாந்தி, மரு. அனிஷ், மரு. ராஜேஷ்குமார், மரு. விஜயா, ப.பிச்சாண்டி நலக்கல்வியாளர், திரு. சு.மாடமுத்து, திரு. விஜயகுமார் மற்றும் அனைத்து வட்டாரத்தில் பணியாற்றும் மருத்துவம் சாரா மேற்பார்வையாளர்கள் கலந்து கொண்டனர்.